2. தகவல் கோரல்

மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர்களின் வேலைநிறுத்தம்

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, ...

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லுங்கள், திரு. பீட்டர் அல்போன்ஸ்.*

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக நம்முடைய மருத்துவக் கல்லூரிகளிலே பயின்று பயிற்சி எடுக்கக்கூடிய பயிற்சி டாக்டர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். இதன்மூலமாக, அரசு மருத்துவமனைகளிலே சிகிச்சை பெறுகின்ற நோயாளிகள், பெரும் துன்பத்திற்கும், சிரமத்திற்கும் உள்ளாயிருக்கிறார்கள். இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பீட்டர் அல்போன்ஸ், இன்றைக்குக் கேள்வி நேரத்தையே ஒத்திவைத்திருக்கிறோம். அதனால்* No zero hour. *நாளைக்கு எடுப்போம்.*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *சரி. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளைக்கு எடுப்போம் என்று சொல்லிவிட்டேன். உட்காருங்கள். வேறு* subject *இருந்தால் எல்லாவற்றையும் நாளைக்கு எடுப்போம். உட்காருங்கள் (குறுக்கீடு) நாளைக்குத்தான் எடுப்போம் என்று சொல்கிறேன். பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களைப் பேச விட்டால் எல்லோரும் எழுந்து சொல்லிக்கொண்டேயிருப்பார்கள்.* It will take time. Please sit down. *(குறுக்கீடு) திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.*

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி டாக்டர்கள் குறித்து ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாளை அதை எடுத்துக்கொள்வீர்களா என்பதை உங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள்.*